இருக்கும் என்று சொன்னால், தொடக்கப் பள்ளிகள் கண்டிப்பாகத் தேவை என்றிருக்கக்கூடிய ஒரு நிலை இருக்குமென்று சொன்னால், தேவையினுடைய அடிப்படையில் நிச்சயமாக, மாநில அரசு முயற்சி எடுத்து இந்த ஆண்டு தேவைப்படக்கூடிய இடங்களில் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

சீரமைத்தல்

*__41646—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தடாகம் கிராமத்தில் வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள முனைப்பா ஏரியைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தடாகம் கிராமத்தில் வனத் துறைக்குட்பட்ட முனைப்பா ஏரியை விழுப்புரம் சமூகக் காடுகள் வனக்கோட்டத்தின்மூலம் 2006–2007–ல் தமிழ்நாடு காடு வளர்ப்பு (பகுதி 2) திட்டத்தின்கீழ் தேர்வு செய்து, 2007–2008–லே உடைந்த பகுதியான 40 மீட்டர் நீளமுள்ள கரையில் சுவர் அமைத்து, ரூ.1,24,500/- செலவில் அது நிறைவேற்றப்பட்டது. இப்போது அந்த ஏரியில் தண்ணீர் நிறைந்து காணப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட தடாகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2008 ஏப்ரல் 8]

கிராமத்தில் இருக்கிற முனைப்பா ஏரி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பெய்த பெருமழையின் காரணத்தால், வனத் துறைக்குச் சொந்தமான கரைப் பகுதியானது உடைந்து, கடந்த 2 ஆண்டுகளாக அங்கே வருகிற நீர் அந்த ஏரியில் தேங்காமல், விவசாயத்திற்கும் பயன்படாத ஒரு நிலை இருந்தது; சென்ற ஆண்டிலே இந்தக் கேள்விக்கணையை வினாவாக நான் வைத்தேன். எனவே அதன் அடிப்படையிலே அந்த ஏரியின் கரைகள் இப்போது பலப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மேலும், அந்த ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்துகின்ற விதத்தில், அதைத் தூர்வாரி, கரைகளைச் செப்பனிடுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முனைப்பா ஏரி 100 ஏக்கர் பாசன வசதி உள்ள ஏரி. அதன் வாய்க்காலின் நீளம் சுமார் 1 கி.மீ. உள்ளது. அந்தப் பகுதியை மேலும் ஆழப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் கரைகள் பலப்படுத்தப்பட்டு, தண்ணீர் தேங்குகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முனைப்பா ஏரி, அந்தப் பகுதியில் இருக்கின்ற போத்துவாய், தடாகம் உள்ளிட்ட ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படவிருக்கின்ற ஓர் ஏரி. அந்த ஏரியை இந்த ஆண்டு தூர் வாரவேண்டும். அதைப்போல தமிழகம் முழுவதும் வனத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற ஏரிகளை, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்ற விதத்தில், அந்த ஏரிகளையெல்லாம் தூர்வாரி, கரைகளைச் செப்பனிடும் திட்டம் துறையின் செயற்குறிப்பில் உள்ளதா, இந்த ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

[2008 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 4–வது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், தமிழ்நாட்டிலே காடு வளர்ப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியோடு தொடங்கப்பட்டு, 8 ஆண்டுக் காலங்களிலே 1,367 கிராமங்கள் எடுக்கப்பட்டு, 23,454 தடுப்பணைகளும், அதைப்போல 2,201 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு பயன்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டமாக, இப்போது இந்த மூன்றாண்டுகளில் தடுப்பணைகள் கட்டுகின்ற பணிகளைப் பொறுத்தவரை, 2005–2006–லே 1,181 தடுப்பணைகளும், 234 கசிவுநீர்க் குட்டைகளும், 2006–2007–லே 998 தடுப்பணைகளும், 235 கசிவுநீர்க் குட்டைகளும், 2007–2008–லே 982 தடுப்பணைகளும், 295 கசிவுநீர்க் குட்டைகளும் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகள் பயன்படுகின்ற வகையிலே இந்தத் துறை பணியாற்றி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

இருவழிச்சாலை

***23—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கோட்டநத்தம்பட்டி விலக்கு முதல் வெள்ளலூர் உறங்கான்பட்டி வழியாக மதகுப்பட்டி வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோட்டநத்தம்பட்டி விலக்கு முதல் வெள்ளலூர் உறங்கான்பட்டி வழியாக மதகுப்பட்டி வரை செல்லக்கூடிய சாலை மாவட்ட இதர

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS